Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஆவணி 31    ( 16 - 09 - 1991 )    திங்கட்கிழமை    ஓசை: 210

## இலங்கை திரும்பிச்செல்ல அகதிகள் விருப்பம்

இலங்கையின் அரசியல் அமைதியின்மை முடிவுற்றதும்தாங்கள் இலங்கை திரும்ப தமிழகத்திலுள்ள அகதிகள் பலர் விருப்பம் தெரிவித்திருப்பதாக தமிழக வருவாய்த் துறை அமைச்சர் சோமசுந்தரம் தெரிவித்துள்ளார் மதுரையிலுள்ள அகதி முகாம்களை சுற்றிப்பார்த்த பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அகதிகள் திரும்பிப்போக ஆசைப்படும் தகவலை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் தெரிவிக்கப் போவதாகவும், இந்த விடயம் தொடர்பாக கொள்கை தீர்மானம் மேற்கொள்ள முதலமைச்சர் மத்திய அரசுடன் ஆலோசனை நடத்துவார் என்றும் சோமசுந்தரம் தெரிவித்தார்.

# மணலாற்றில் புலிகள் கடும் எதிர்ப்பு

# போரின் முடிவு பற்றி கூறமுடியாது

## வீரவணக்கம்

### லெப். குலன்

மாவிட்டபுரம் பகுதியில் நடைபெற்ற மோதல் சம்பவமொன்றில் லெப். குலன் (சபாபதி பார்த்திபன், கோண்டாவில்) வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இராணுவ தரப்பில் பலத்த சேதம்

(கொழும்பு)

மணலாற்றுக் காட்டுப் பகுதியில் மூன்றாவது வாரமாக கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும், புலிகள் காட்டும கடும் எதிர்ப்பினால் அவர்களின் முகாம்கள் எப்பொழுது கைப்பற்றப்படும் என்றோ, போர் எப்பொழுது முடிவடையும் என்றோ கூறிவிடமுடியாது எனவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 25பேர் படுகாயமடைந்ததாகவும சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை மூன்றாவது வாரமாகியும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. சிறிலங்காவின் முப்படைகளும் இரவு பகல் வேறுபாடு இன்றி கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் இத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர், இந் நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவம் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து வருவதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் முன்னரே அறிவித்துள்ளன.

ஆனால் இராணுவத்தரப்பி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு மோதலில் ஐந்து புலிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் 14-09-91 அன்று ஐந்து வேங்கைகள்வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

(4ஆம பக்கம் பார்க்க)

## கைதாகிய இளைஞர்கள் பற்றிய விபரமில்லை

[வவுனியா]

நெடுங்கேணி - மருதோடை வீதியில் அமைந்துள்ள கோப்பா என்ற சிறிலங்கா இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் சமீபத்தில் கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் விடுதலை செய்யப்படவில்லை.

இப்பகுதியில் உள்ளகோவிற் புளியங்குளம் என்ற இடத்தில் மறைந்திருந்த இராணுவத்தினரால் இவ்விரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுமுகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் பற்றிய தகவல்கள் அறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இராஜையா ரஞ்சன் (21) இராசு பரமசிவன் (15) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள். (தி)

## ஓமந்தைவாசிகள் இருவர் வவுனியாவில் கடத்தல்

(வவுனியா)

ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த இருவர் வவுனியா நகரப் பகுதியில் கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ வாகனங்களில் வருவோராலும், மோட்டார் சைக்கிள்களில் வருவோராலுமே பொது மக்கள் கைது செய்யப்பட்டு கடத்தப்படுகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி ஓமந்தை பெரிய விளாத்திக் குளத்தைச் சேர்ந்த சு. பொன்னுத்துரை என்ற குடும்பஸ்தர் வவுனியா அரசாங்க வைத்திய சாலைக்கு எதிரில் வைத்து இனந்தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மகன் இறந்ததனால் தந்தை தற்கொலை

(கொழும்பு)

மணலாற்றுப் போரில்தனது மகன் இறந்துபோனார் என்ற செய்திகேட்ட சிங்களத்தந்தை ஒருவர் தானும் விஷமருந்து குடித்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

தந்தையின் சடலமும் மகனின் சடலமும் ஒரே மயானத்தில் ஒரே சமயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த செவ்வாயன்று நடந்த இச்சம்பவத்தில் உயிரிழந்த தந்தையின் பெயர் ஓ கே டி. தர்மதாச. மகனின் பெயர் ஓ. கே உபுல் பாலித்த (19) என்பதாகும். இவர்கள் மாத்தறையைச் சேர்ந்தவர்களாவர்.

## பிரேமாவின் சட்டவிரோத கட்டளையை ஏற்காதீர்

### அதிருப்தியாளர் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பிறப்பிக்கும் சட்ட விரோதமான கட்டளைகளை முப்படைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று எதிர்க் கட்சிகளும், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிய பிரேமதாசா அதிருப்தியாளரும் கோரியுள்ளனர்.

சிறிலங்கா யாப்பிற்கமைவாக செயலாற்றும்படியும்முப்படைகளை அவர்கள் மேலும் கூட்டாகக் கோரியுள்ளனர்.

மேலும் அவர்கள் தேர்தல் ஆணையாளரையும் மற்றும் சிறிலங்கா நிர்வாக சேவை உத்தியோகத்தர்களையும் யாப்புக்கமைவாகக் கடமையாற்றும்படி கேட்டுள்ளனர்.

புளியங்குளம் என்ற இடத்தில் டவர்கள். (தி)

இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 25பேர் படுகாயமடைந்த தாகவும சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை மூன்றாவது வாரமாகியும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. சிறிலங்காவின் முப்படைகளும் இரவு பகல் வேறுபாடு இன்றி கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர், இந் நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவம் தனது முழுப்பலத்தையும் பிரயோகிதது வருவதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் முன்னரே அறிவித்துள்ளன.

ஆனால் இராணுவத்தரப்பி

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஓமந்தைவாசிகள் இருவர் வவுனியாவில் கடத்தல்

(வவுனியா)

ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த இருவர் வவுனியா நகரப் பகுதியில் கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ வாகனங்களில் வருவோராலும், மோட்டார் சைக்கிள்களில் வருவோராலுமே பொது மக்கள் கைது செய்யப்பட்டு கடத்தப்படுகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி ஓமந்தை பெரிய விளாத்திக் குளத்தைச் சேர்ந்த சு. பொன்னுத்துரை என்ற குடும்பஸ்தர் வவுனியா அரசாங்க வைத்திய சாலைக்கு எதிரில் வைத்து இனந்தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறு மோதலில் ஐந்து புலிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் 14-09-91 அன்று ஐந்து வேங்கைகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

(4ஆம பக்கம் பார்க்க)

# பிரேமாவின் சட்டவிரோத கட்டளையை ஏற்காதீர்

## அதிருப்தியாளர் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பிறப்பிக்கும் சட்ட விரோதமான கட்டளைகளை முப்படைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று எதிர்க் கட்சிகளும், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிய பிரேமதாசா அதிருப்தியாளரும் கோரியுள்ளனர்.

சிறிலங்கா யாப்பிற்கமைவாக செயலாற்றும்படியும்முப்படைகளை அவர்கள் மேலும் கூட்டாகக் கோரியுள்ளனர்.

மேலும் அவர்கள் தேர்தல் ஆணையாளரையும் மற்றும் சிறிலங்கா நிர்வாக சேவை உத்தியோகத்தர்களையும் யாப்புக்கமைவாகக் கடமையாற்றும்படி கேட்டுள்ளனர்.

# பாராளுமன்ற விதிமுறைகளை பிரேமதாசா அச்சுறுத்துகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவும், பாராளுமன்ற விதிமுறைகளை அச்சுறுத்தவும் முனைவதாக முன்னாள் அமைச்சர்கள் மூவர் குற்றம் சுமத்தியுள்ளனர். ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா, பிரேமச்சந்திரா ஆகியோர் கொழும்பில் நேற்று நடத்திய செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பலில் எதிர்பார்த்தபடி சவர்க்காரம் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

கப்பலில் சவர்க்காரம் வந்து சேரவில்லை. கொழும்பிலிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும் கப்பலில் ஐந்து மெற்றிக் தொன் சவர்க்காரம் அனுப்பி வைக்க ஏற்பாடாகியுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் வட்டாரங்களிலிருந்து முன்னர் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. ஐந்து மெற்றிக் தொன் சவர்க்காரம் யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் குறைந்த பட்ச தேவைக்குத்தானும் போதாது என்பது ஒருபுறமிருக்க கப்பலில் சவர்க்கார வகையெதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை தனியார் ஆங்கில மருந்து வர்த்தகர்களுக்கென கொண்டுவரப்பட

(4ஆம் பக்கம் பார்க்க)

# கட்சியின் முடிவிற்குக் கட்டுப்பட்டு நடப்பேன்

## - ஸ்ரான்லி திலகரெட்ணா

(கொழும்பு)

ஜனாதிபதிக்குஎதிரான குற்றச்சாட்டு மனு தொடர்பாக கட்சியின்முடிவுகளுக்குத் தான் கட்டுப்பட்டு நடக்கவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரான்லிதிலகரெட்ணா தெரிவித்துள்ளார்.

கட்சியின் மூத்த உறுப்பினர் என்ற முறையில் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவது அல்லாமல் கட்சியின் கட்டுப்பாட்டை மீறுவது தனது நோக்கமல்ல என்றும்தெரிவித்துள்ளார்

ஜனாதிபதிக்கு எதிரான மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மிகப் பாரதூரமானவை. உள்ளடக்கத்தை நன்றாகப் படித்து விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதால் தான் முன்னதாக அதில் ஒப்பமிடவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 8ஜே வி.பி. உறுப்பினர்கைது 50 துப்பாக்கிகள் மீட்பு

(கொழும்பு)

தெற்கில் எட்டு ஜே.வி.பி. இயக்க உறுப்பினர்களும் அவர்களின் 50 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாக தென்பகுதி பொலிஸார் கூறி உள்ளனர்.

மாத்தறை பெலியத்தை எனும் இடத்தில் 17 துப்பாக்கிகளுடன் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மீதி ஏழுபேரும் ஆயுதங்களும் பிடிபட்டதாகவும் பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன

# தியாகி திலீபன் நினைவுநாள் தமிழீழம் எங்கும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் நேற்றுத் தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் ஆரம்பமாகின. ''பெரும் புயல் வீசட்டும், புலிகள் பாசறை நிறையட்டும்'' என்று பொறித்த வீதி வளைவுகள் யாழ். நகரின் பல பகுதிகளிலும் காணப்பட்டன. மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் நீராகாரம் கூட அருந்தாதுதன் உயிரை அர்ப்பணித்த தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் நேற்று எங்கும் ஆரம்பமாகின.

ஆங்காங்கே ஆண்களும், பெண்களுமாகக் குழுமிய மக்கள் நினைவுப் பந்தல்கள் அமைத்து, சோடனைகள் செய்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்துவதையும காணக்கூடியதாக இருந்தது.



மேலும் தடகள விளையாட்டுப் போட்டிகளும், பொது அறிவு, கட்டுரைப் போட்டிகளும் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

பந்தல்களை அலங்கரிக்கும் பணியை சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன விசேடமாக ஒழுங்கு செய்துள்ளன. மேலும் எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ். கோட்டை முகாம் புலிகள் கைக்கு வந்த தினமும் கொண்டாடப்பட உள்ளது என்பதும்குறிப்பிடத்தக்கதாகும்.

# பீடாதிபதிகளிடம் காமினி விளக்கம்

(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதிபிரேமதாசாவின் மீதான குற்றவியல் மனுவில் தான் ஏன் கைச்சாத்திட்டேன் என்பதை முன்னாள் அமைச்சர்காமினிதிசநாயக்கா மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து விளக்கியுள்ளார்.

கடந்த வெள்ளியன்று இச் சந்திப்பு நடைபெற்றது.

# தியாகி திலீபனின் திருவுருவப்பட திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்த தினமாகிய நேற்று அன்னாரின் திருவுருவப்படத்தை அவரது தந்தையார் திரு. நாகலிங்கம் இராசையா அவர்கள் மு. ப 9.55 மணியளவில் யாழ். மாவட்டப் புள்ளிவிபரவியல் செயலகத்தில் திரை நீக்கம் செய்து வைத்தார் பின் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலைகள் சூட்டப்பட்டன.

''தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும் இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்''

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

(B/3127)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
12 - 03 - 1974

யாழ்.
கோட்டையில்
16-09-1990

## 2ஆம் லெப்டினன்ட் நிமலன் (சிட்டு)

(பாலசிங்கம் ஜெயவதனன்)
(தும்பளை பருத்தித்துறை)

நாட்டிற்கொரு வீரனாய் வீட்டில்
பிறந்தாயே மகனே
ஈழமண்ணை மீட்டுஎடுக்க ஓடிப்போனாயே
என் சித்திரமே
கொடிய அரக்க ஆமியின் இலக்கிற்கு
ஆனாயே என் செல்வமே?
என் சித்திரமே
உன் அம்மாவின் இதயத்தில்
அணையாத ஓவியமே
கோட்டையிலே
உன் உயிர் பிரிந்த இடத்தில்
உங்கள் புலிக்கொடி
பறக்குதடா என் கண்மணியே
உங்கள் இலட்சியம் நிறைவேற
உங்கள் தோழர்கள் பின்தொடரட்டும்
என் கண்ணின் கருமணியே
களங்கமிலா ஓவியமே
உன் ஆசைக் கனவுகள்
நிறைவேறட்டும்
ஈழம் மலரட்டுமடா
என்கண்ணின் மணியே

உன் பிரிவால் துடிக்கும்
அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள்.

(R-1740)

# 42ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின்
மடியில்

தாய்
மண்ணின்
மடியில்

---

## வரி விளம்பரம்

### அறிவித்தல்

14.9.91 அன்று வல்லை சந்திக்கும் இருபாலை சந்திக்கும் இடைப்பட்ட யாழ்ப்பாண பிரதான வீதியில் மூக்கு கண்ணாடி கவருடன் தவறி விட்டது தயவு செய்து இதைக் கண்டு எடுத்தவர்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோண்டாவில் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். (R/1750)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை
விஞ்ஞான
மாணவர்களுக்கான
ஆங்கிலப்பாடநெறி

### கல்வியாண்டு 1990/91

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்ட விஞ்ஞான மாணவர்களுக்கும் ஏனைய (சிரேஷ்ட) விஞ்ஞான மாணவர்களுக்கும் 1990/ 91ம் கல்வி ஆண்டு 02.12 91 இல் தொடங்கும். புதிய மாணவர்களுக்கான ஆங்கில பாடநெறி 01.10 91 இல் ஆரம்பமாகும். இம் மாணவர்கள் 01.10 91 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து கனக சபாபதி மண்டபத்தில் (கணிதப்பிரிவு) நடைபெறவுள்ள தகுதிகாண் பரீட்சைக்கு பின் வரும் ஆவணங்களுடன் தோற்றுதல் வேண்டும்.

1] தேசிய அடையாள அட்டை
2] பதிவீட்டு அட்டை

புதிதாக அனுமதிக்கப்பட்ட எல்லா (பௌதிக, உயிரியல்) விஞ்ஞான மாணவர்களுக்கும் ஆரம்ப கணனிப் பயிற்சிநெறி 4 11.91 இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்

---

# ஈராண்டு நினைவாக



உயர்திரு
## நமசிவாயம் தெய்வேந்திரன்
[நாதன்]

பிறப்பு 15.09.1958 — இறப்பு 22.09.1989

எங்கள் குலக் கொடியே!
ஈழத்தின் குல விளக்கே!
உன்பசுமையும் பரம்பலும்
பகலும் இரவுமாய் பணிசெய்த பண்பும்
இல்லை என்ற நிலைதான் எங்களுக்கு
ஆயின்! உன் இருப்பின் இதயத்தின்
கசிவும் ஈரமும் எம்முற் பசுமை செய்வதேன்!
நீ இல்லாத போது உன் இருப்பு இப்போ
நினைவுத்தடத்தின் உயிரோட்டமாய் நகர்கிறது.
உருவத்தில் இல்லாதவன் அருவத்தில் இருக்கலாம்
அருவம் இதயத்தில் உருவம் கொள்ள வாய்ப்புண்டு
ஈராண்டு கடந்தாலும் உன் வடிவம்
எங்கள் கருத்தில், கண்ணில், மண்ணில்
விதைபயிராய்
விளைச்சல் தந்து வேதனை அகற்றி விளங்கும்.
வீரனே! உன் வடிவவார்ப்புக்கு எங்கள் வணக்கம்.

உங்கள் அன்புமிகு
அம்மா, ஆசையம்மா, சகோதரர்கள்
மைத்துனர்

---

யாழ்ப்பாணக் கல்லூரி

## புதிய மாணவர் அனுமதி 1992

பின்வரும் ஆண்டுகளில் மட்டும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

ஆண்டு 1 : 01-02-1986 தொடக்கம் 31-01-1987 வரை பிறந்த பிள்ளைகள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர் (விண்ணப்பிக்கலாம்).

ஆண்டு 6 : 01-02-1981 தொடக்கம் 31-01-1982 வரை பிறந்த பிள்ளைகள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர் (விண்ணப்பிக்கலாம்)

ஆண்டு 12 : விஞ்ஞானம், கலை, வர்த்தகம், க.பொ.த (சாதாரணம்) பரீட்சையில் திறமைச் சித்திகளைப் பெற்றவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர். (விண்ணப்பிக்கலாம்) ஆற்றல் மிகுந்த மாணவர்களுக்கு மட்டும் ஒருசில புலமைப் பரிசில்கள் உண்டு.

அனுமதிப் பரீட்சை ஆண்டு 6 : 19-10-1991
நேரம் : காலை 9-00 மணி
பாடங்கள் : கணிதம், ஆங்கிலம், தமிழ்மொழி.
நேர்முகப் பரீட்சை ஆண்டு 1 : 19-10-91
நேரம் : காலை 9-00 மணி

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று ரூபா 50/-ற்கான பற்றுச்சீட்டுடன் சமர்ப்பிக்கவும்.

(B/3114)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 09 - 16

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

லெப்.சங்கிலி (மாரிமுத்து மகேந்திரராசா - திருக்கோணமலை)
சரவணன் (சோமசுந்தரம் அருட்குமார் - திருக்கோணமலை)
யோகன் (தம்பிரான் சந்திரமோகன் - சாம்பல்தீவு)
கந்தசாமி (நிலாவெளி)
கோணேஷ் (கந்தையா சிவனருள் - திருமலை)

உன் பிரிவால் துடிக்கும்
அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள்.

(R-1740)

## 42ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 02 . 12 . 1971

தாய் மண்ணின் மடியில் 06 . 08 . 1991

### வீரவேங்கை லெப். வாசு

செல்வன் பொன்னுத்துரை
இந்திரகாசன் (இந்திரன்)

வீரமரணம் என்பது-

வீர விளையாட்டுகள் காட்டித் தன்னை மகிழ்வித்த தன் மைந்தன் களைப்படைந்து விட்டதனை உணர்ந்த தாயானவள், அவனை அழைத்து அணைத்து, உச்சிமுகர்ந்து, தன் மடியில் துயிலவைப்பதாகும்.

எங்கள் வீரவேங்கையே! வாசு!

அன்னை பூமி, தமிழீழத்தாய் உன் வீரவிளையாட்டில் மகிழ்ந்து பூரித்து உனைத் தூங்க வைத்தனள் களைப்பு நீங்கித் தூக்கம் கலைந்து புதுப்பொலிவோடும், புத்துணர்வோடும் பொங்கி வீறு கொண்ட விடுதலை வேங்கையெனப் பாய்ந்து வாராய்!

உந்தனுக்கும் மண்ணின் விடுதலைப் போரில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்ட அத்தனை வீர வேங்கையருக்கும் எமது வீர அஞ்சலிகள்.

பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

16, பாரதி வீதி,
(இல்னர் ஒழுங்கை)
வண்ணார்பண்ணை.

(B/3121)

---

சபாபதி மண்டபத்தில் (கணிதப்பிரிவு) நடைபெறவுள்ள தகுதிகாண் பரீட்சைக்கு பின் வரும் ஆவணங்களுடன் தோற்றுதல் வேண்டும்.

1] தேசிய அடையாள அட்டை

2] பதிவீட்டு அட்டை

புதிதாக அனுமதிக்கப்பட்ட எல்லா (பௌதிக, உயிரியல்) விஞ்ஞான மாணவர்களுக்கும் ஆரம்ப கணனிப் பயிற்சிநெறி 4 11.91 இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்

[B/3126]

---

பகலும் இரவுமாய் பணிசெய்த பண்பும்
இல்லை என்ற நிலைதான் எங்களுக்கு
ஆயின்! உன் இருப்பின் இதயத்தின்
கசிவும் ஈரமும் எம்முற் பசுமை செய்வதேன்!
நீ இல்லாத போது உன் இருப்பு இப்போ
நினைவுத்தடத்தின் உயிரோட்டமாய் நகர்கிறது.
உருவத்தில் இல்லாதவன் அருவத்தில் இருக்கலாம்
அருவம் இதயத்தில் உருவம் கொள்ள வாய்ப்புண்டு
ஈராண்டு கடந்தாலும் உன் வடிவம்
எங்கள் கருத்தில், கண்ணில், மண்ணில்
விதைபயிராய்
விளைச்சல் தந்து வேதனை ஆற்றி விளங்கும்.
வீரனே! உன் வடிவவார்ப்புக்கு எங்கள் வணக்கம்.

உங்கள் அன்புமிகு
அம்மா, ஆசையம்மா, சகோதரர்கள்
மைத்துனர்

(R/1744)

---

# தொழிலாளர் தேவை

பூநகரி கேரதீவு, சங்குப்பிட்டி இறங்கு துறையில் அக்கரையில் இருந்து இக்கரைக்கு வரும் பொதி சுமக்கும் லொறிகளில் உள்ள பொதிகளை ஏற்றி இறக்குவதற்கு தொழிலாளர்கள் உடன்தேவை. தமிழீழத்தில் சகல மாவட்ட தொழிலாளர்களும் உங்கள் பகுதி விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி அரசியல் பொறுப்பாளரின் கடிதத்துடன் எதிர்வரும் 30.09.91 திகதிக்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு;- **விடுதலைப் புலிகள் நிதிப் பிரிவு**
பூநகரி செயலகம்
பூநகரி.

குறிப்பு: உங்கள் பிரிவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரின் கடிதம் இல்லாவிட்டால் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை அறியத் தருகின்றேன்.

கேரதீவு, சங்குப்பிட்டி
இறங்குதுறை
நிர்வாகி.

[B-3125]

---

## 1991-09-16

1985ஆம் ஆண்டு இத்தினத்தில் திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

லெப்.சங்கிலி (மாரிமுத்து மகேந்திரராசா - திருக்கோணமலை)

சரவணன் (சோமசுந்தரம் அருட்குமார் - திருக்கோணமலை)

யோகன் (தம்பிரான் சந்திரமோகன் - சாம்பல்தீவு)

கந்தசாமி (நிலாவெளி)

கோணேஷ் (கந்தையா சிவஅருள் - திருமலை)

ஏறாவூரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரமரணமெய்திய

மைக்கல் (நல்லையா பாரதிதாஸன் - ஏறாவூர்)

சதீஷ் (காமாட்சி சுந்தரம் சதீஷ்குமார் - ஏறாவூர்)

தாவற்குடாவில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரமரணமெய்திய

நாகலிங்கம் (தாவற்குடா)

முள்ளியவளையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட நான்கு தமிழ்மக்கள்

1986ஆம் ஆண்டு காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

ராஜ்குமார் (நல்லதம்பி சந்திரதாஸ் - பாண்டிருப்பு, கல்முனை)

லெப்.கணேக்ஸ் (ஞானமுத்து பேனாட் [வேலன்] - பாண்டிருப்பு, கல்முனை)

நீலன் (மயில்வாகனம் சிவகுமார் - தம்பிலுவில்)

1987ஆம் ஆண்டு வேப்பங்குளத்தில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய

யோகன் (சுப்பிரமணியம் தயாநிதி - பாரதிபுரம், வவுனியா)

1989ஆம் ஆண்டு கள்ளிக்காட்டில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

கணேஷ் (கு. சந்திரமோகன் - கருநாட்டுக்கேணி)

1990ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

சுபாஷினி (சரஸ்வதி சின்னக்கண்டு - மடத்துப்புலவு, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி)

மன்னார் விடத்தல்தீவில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

கப்டன் ஜெயா (சந்தியோகு பெரேரா தேவசகாயம்பெரேரா - நொச்சிக்குளம், உயிலங்குளம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8118)

### சிந்தனைக்கு

செயல், பயனுள்ளதாக இருக்க,
தெளிவாக வகுத்து ஏற்கப்பட்ட
குறிக்கோள்களை நோக்கிச்
செலுத்தப்பட வேண்டும்.

— ஜவஹர்லால் நேரு.


# ஈழநாதம்

81, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம், 1[illegible]-09-1991
தொலைபேசி
[illegible]


## புதிய பாதை நோக்கி

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விஸ்தரிக்க வேண்டும் என்றும் மூன்றாம் உலகநாடுகளின் கையில் அதிக சக்தியை வழங்குமாறும் அணிசேரா இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. கானாவின் தலைநகர் அக்ராவில் கூடிய வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டிலேயே இந்தக் கோரிக்கை விடுவிக்கப்பட்டது.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்ததைத் தொடர்ந்து உலகில் கெடுபிடி யுத்த நிலைமை உருவான போது அணிசேரா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது உலகில் கெடுபிடியுத்தம் முடிவடைந்த வேளையில், தொடர்ந்தும் இயங்க வேண்டுமா என்ற கோரிக்கை எழுந்திருந்த வேளையில் கானாவில் இந்த அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு இந்த முறை கூட்டப்பட்டது. இந்த அமைப்பு தொடர்ந்தும் இயங்குவதென்றும், அணிசேரா நாடுகள் என்ற பெயரில் மாற்றம் எதுவும் கொண்டுவரத் தேவையில்லை எனவும் இந்த மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமது கடந்தகாலக் கொள்கையில் இருந்து சற்றுமாறுபாடான போக்கையும் தற்பொழுது அறிவித்துள்ளது.

தற்பொழுது, புதிய நோக்கில் அணிசேரா இயக்கம் முதலாம் உலகநாடுகள் பெருமளவு பொருளாதார உதவியை அணிசேரா நாடுகளுக்கு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளன. மூன்றாம் உலகநாடுகளுக்கு வழங்கும் உதவிகளுக்கு - முதலாம் உலகநாடுகள் கட்டுப்பாடுகள்' நிபந்தனைகளை விதிப்பதையும் அவை கண்டனம் செய்துள்ளன. ஐரோப்பாவில் கம்யூனிஸத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து முதலாம் உலகத்தின் பொருளாதார உதவிகளை மூன்றாம் உலகிற்கு அளிப்பதில் முதலாம் உலகநாடுகள் கட்டுப்பாடுகளை விதிப்பதாக அவை உணர்கின்றன. இதன்காரணமாக முதலாம் உலக நாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவை போராட்டத்தைத் துரிதப்படுத்தியுள்ளன.

மேலும் கெடுபிடி யுத்த முடிவு குறிப்பாக அணிசேரா நாடுகளின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. கடந்தகாலத்தில் அணிசேரா நாடுகளில் பல சோவியத் சார்புநாடுகளாக இருந்தன. அத்தோடு வளைகுடாப் போரின் போது அமெரிக்கா நடந்து கொண்டவிதமும், ஐ.நா. சபையை தனது எடுபிடியாக அமெரிக்கா பயன்படுத்தியதையும் கண்டு அவை அச்சமடைந்துள்ளன. இதன்காரணமாக உலகில் ஐ.நா. அடுத்தபடியாக உலக நாடுகள் கூடுதலான அளவில் (103 நாடுகள்) அங்கம்

# விழுதுகள்

## லெப். கேணல் டேவிட்

அந்த நாட்கள்,

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் மெல்ல, மெல்ல விரிவடையத் தொடங்கிய நாட்கள். தமிழக மண்ணில் புலிகளின் பயிற்சித் தளங்கள் இருந்தன. தமிழீழத்திலிருந்து தமிழகத்திற்கு செல்வதற்காக, கடல் நடுவே கடுமையாக போராட வேண்டி இருந்தது.

1984 மாசி மாதம்,

வாடைக் காற்றின் கொடிய குளிர் நெஞ்சில் விழுந்து கொண்டிருந்தது, சினந்து சீறி எழுந்த அலைகள் கரையில் மோதி கடலின் பயங்கரத்தை காட்டி நின்றன.

கரிய இருளில் தமிழக கரையைத் தேடி ஓட, படகு ஒன்று அலைகளில் தள்ளாடிக் கொண்டு நின்றது.

பிரதான படகோட்டிக்கு அருகில், துணை ஓட்டியாக டேவிட் நின்றான், சாதுவான கரிய நிறம். ஒரு படகோட்டிக்கே உரிய கம்பீரமான தோற்றம், அப்போதெல்லாம் அவனுக்கு பதினெட்டு வயது தான் இருக்கும்.

அன்றுதான், தனது தனது போராட்ட வாழ்க்கையில் கால் எடுத்து வைத்தான் டேவிட். 1984 இன் பிற்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தலை சிறந்த படகோட்டிகளில் டேவிட்டும் ஒருவனாக மாறிவிட்டான்.

அலைகளை அள்ளி வீசும் ஆழக்கடல் - சில நேரங்களில் சினந்து கொந்தளிக்கும், சாதுவாக தடவிச் செல்லும் காற்று சில நேரங்களில் கொடுமையாக வீசியடிக்கும், தாலாட்டும் அலைகள் படகினை விழுங்கிவிட உயர்ந்து பாயும். இதேவேளையில், தனது கண்களை தூர் எறிந்தபடியே கடற்படைப் படகுகள் இரைதேடி அலையும், — இவற்றை எதிர் கொண்டு புலிகளின் படகு கடலில் மின்னலெனப் பறக்கும், தமிழீழக் கடற்பரப்பில் வண்டி ஒன்று பயணம் போவதும், திரும்பி வருவதும் உண்மையில் ஒரு பெரிய செருக்களத்திற்கு சென்று திரும்புவதற்கு சமமானது.

இந்தப் படகோட்டிகள் தான் எவ்வளவு உறுதியானவர்கள்?

ஆபத்தை எதிர்பார்த்தபடியே நிச்சயமற்ற பயணத்தைத் தொடங்கும் அவர்கள் கடலில் தான் எவ்வளவு உறுதியாக இருக்கிறார்கள்.

கடலின் விளிம்பை கண் கண்களால் அளசிய படியே, சிங்களத்துப் படகுகளுக்கும், அவற்றிலிருந்து சிந்தும் ரவைகளுக்கும், ஏவுகணைகளுக்கும், பகற்றப்படாமல்,

இசைகளை மாற்றி ஓடி, எதிரியின், கண்களிற்கு மறைந்து படகினை காப்பாற்றி விடுவார்கள். அவர்களின் வீரமும், விவேகமும், திறமையும் மிகவும் உயர்வானதாகும்.

ஒரு சிறந்த ஓட்டிக்குரிய இலட்சணங்களில் ஒரு சிறிய மறுக்கூட காணப்படாத ஓட்டியாக விளங்கியவன் லெப் கேணல் டேவிட் ஆகும்.

தமிழீழக் கடலின் ஓரக் கரைகளில் இவன் கால் படாத இடங்களே இல்லை என்று சொல்லலாம். மன்னார் தொடக்கம் அம்பாறை வரை இவனைத் தெரியாத போராளிகளே இருக்க முடியாது.

கடலில் நின்றபடியே எந்தக் கரை என்பதை இலகுவாக இனங்கண்டு விடுவதில் வல்லவன்.

கடலில் மட்டும்தான் டேவிட் போராடியவன் என்றில்லை. தரையிலும் பல தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கியவன்.

1986 ஆம் ஆண்டில் சிறிலங்கா இராணுவம் ஆனையிறவில் இருந்து சாவகச்சேரி நோக்கி தனது படை நகர்வை மேற்கொண்ட வேளையில் பளையை அடுத்த பகுதிகளில் வீராவேசத்தோடு சமராடி எதிரியை நிலைகுலையச்செய்தவர்களில் டேவிட்டும் ஒருவன். அப்போர்க் களத்தில் "அங்கிள்" வீரமரணமடைந்த போது, இவன் காயமடைந்தான்.

தொடர்ந்து கடலிலும் - தரையிலும் இவனது போராட்ட வாழ்க்கை கழிந்தது. டேவிட்டுடன் பழகும் எவரும் அவனுடைய சிந்தனைகள் யாவும இயக்கம்-விடுதலை என்னும் இரண்டுவார்த்தைகளையும் மையப்படுத்தி இருப்பதை அறிந்து கொள்வார்கள்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சி மீது "ஒப்பிரேசன் லிபரேசன்" என்னும் இராணுவ நடவடிக்கையை இராணுவத்தினர் நடாத்திய பொழுது, [illegible]லாம் கொண்டுசென்று விமான எதிர்ப்புத்தாக்குதலை டேவிட் மேற்கொண்டான். இந்த வேளையில் தான் எதிரியின் குண்டுகள் இவனை சல்லடை போடுகின்றன. இங்கு ஏற்பட்ட வீரத் தழும்புகள் இவனது கையில் நிரந்தரமாக ஒரு நோவை ஏற்படுத்தி விட்டன. அவனது கை சில நேரங்களில் விறைத்து விடும்.

ஒரு படகோட்டிக்கு உறுதியான கைகள் அவசியமானவை, இதைக் குறித்து டேவிட் சிலவேளைகளில் சிந்திப்பான்.

"இந்தக் காயத்தினால் எனக்கு ஏற்பட்டு விறைப்பை நான் சிந்திப்பதில்லை. ஆனால் பொறுத்த நேரங்களில் இது ஏற்பட்டு இதனால் என்னுடன் வருபவர்களுக்கு ஆபத்து ஏற்படக் கூடாது என்றுதான் சிந்திக்கிறேன்" என்பான் டேவிட்.

இந்தியப் படைகள் இந்த மண்ணை ஆக்கிரமித்த போது வடமராட்சிப் பகுதியில் நின்று டேவிட் செயற்பட்டான். அந்நேரங்களில் நடந்த தாக்குதல் நடவடிக்கைகளிலும் பங்கு பற்றினான். இந்தியப் படைகள் இருந்த காலத்திலும் - வெளியேறத் தொடங்கிய நாட்களிலும் தமிழ் தேசத்தில் அழிவுகளை விதைத்த தேசத்துரோகிகளை தரையிலும் - கடலிலும் தேடி அழிப்பதில் டேவிட் மிகவும் கவனம் செலுத்தினான்.

இந்தியர்கள் வெளியேறி - மீண்டும் சிறிலங்காவுடனான யுத்தம் தொடங்கிய பின்பு கடலே டேவிட்டின் வாழ்விடமாகிப் போய்விட்டது.

கடற்பரப்பில் நின்று எந்நேரமும் அழிவுகளை விளைவிக்கும் கடற்படையினருக்கு கடலில் வைத்து கரும்புலித் தாக்குதலை நடத்த திட்டமிடப்பட்டது.

மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகிய மூன்று கரும்புலிகளும் வெடிமருந்து நிறைந்த படகோடு கடற்படையின் பாரிய கொள்கலன் (கென்டெயினார்) கப்பலை இலக்கு வைத்துச் சென்றனர்.

அதே நேரம், அவர்களின் இலக்கினை அடையும் வரை [illegible] வெற்றிகரமாக நிறைவு செய்வதில் டேவிட் பங்காற்றினான்.

இவனது குடும்பமோ வறுமையில் தவித்தது நாலு சகோதரிகள் அவர்களுக்கு துணையாக ஒரு அண்ணன் இருந்தான். ஆனால் துயரமான சம்பவம் ஒன்று அண்மையில் நிகழ்ந்தது.

டேவிட்டின் அண்ணன் இராணுவ வெறியர்களின் துப்பாக்கிக் குண்டிற்கு பலியானார்.

இந்தத் தேசத்தில் நிலவும் சோகங்கள் டேவிட்டின் வீட்டையும் பாதித்தது.

அப்படித்தான் — — அன்று கரையிலிருந்து கடலில் இறங்கி டேவிட்டின் படகு வேகமாக ஓடியது. கண்ணுக்குத் தெரியும் கடற்படைப்படகுகளின் ஒளிப்பொட்டுகளுக்கு விலகி இருளில் எதிரியைத் தேடியபடி அலைகளில் எத்துப்பட்டு அப்படகு விரைந்தது:

அன்று காற்று பலமாகவே வீசியது. அலையும் அதிகமாகவே தூக்கிப்போட்டது. அந்நேரம்தான் படகில் அலையின் பலமான உதைப் போன்று நிகழ்ந்தது.

அந்தப் படகு நடுவில் பிளந்து போனது எதுவுமே செய்யமுடியாத கணங்கள்.. ஆபத்தை கரையில் நின்ற போராளிகளுக்கு வோக்கியில் அறிவித்தான் டேவிட்.

இன்னொரு படகு அவர்களை தேடி கடலில் வேகமாக ஓடத்தொடங்கியது. கடலில் தத்தளித்து வந்த இரு தோழர்கள் மீட்புப்படகால் காப்பாற்றப்பட்டார்கள்.

டேவிட்டையும், மற்றத் தோழர்களையும் தேடி இரவு விடியும்வரை அந்தப் படகு அலைந்தது—, இந்த மண்ணுக்கு விடிவு தேடி கடலில் பயணம் போன டேவிட் கடலில் சங்கமித்து தன் தோழர்களுடன் கலந்து விட்டான்.

## சாரணர் தவணையாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

சாரணர்தவணையாக மூன்றாம் தவணையை யாழ். இந்துக்கல்லூரி பிரகடனப் படுத்தியுள்ளது

மேற்படி கல்லூரியில் சாரணர் குழு ஆரம்பிக்கப்பட்டு எழுபத்தைந்தாண்டுகள் நிறைவாவதை முன்னிட்டே மேற்படி பிரகடனத்தை அக்கல்லூரியின் அதிபர் அ. பஞ்ச

மனதையும் அவை கண்டனம் செய்துள்ளன. ஐ... கம்யூனிஸத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து முதலாம் உலகத்தின் பொருளாதார உதவிகளை மூன்றாம் உலகிற்கு அளிப்பதில் முதலாம் உலகநாடுகள் கட்டுப்பாடுகளை விதிப்பதாக அவை உணர்கின்றன. இதன்காரணமாக முதலாம் உலக நாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவை போராட்டத்தைத் துரிதப்படுத்தியுள்ளன.

மேலும் கெடுபிடி யுத்த முடிவு குறிப்பாக அணிசேரா நாடுகளின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. கடந்தகாலத்தில் அணிசேரா நாடுகளில் பலசோவியத் சார்புநாடுகளாக இருந்தன. அத்தோடு வளைகுடாப் போரின் போது அமெரிக்கா நடந்து கொண்டவிதமும், ஐ நா. சபையை தனது எடுபிடியாக அமெரிக்கா பயன்படுத்தியதையும் கண்டு அவை அச்சமடைந்துள்ளன. இதன்காரணமாக உலகில் ஐ நா. அடுத்தபடியாக உலக நாடுகள் கூடுதலான அளவில் (103 நாடுகள்) அங்கம் வகிக்கும் அணிசேரா அமைப்பிற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என அவை கோரியுள்ளன.

அணிசேரா நாடுகளின் இந்தக் கோரிக்கை ஏற்புடையது ஏனெனில், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அணிசேரா நாடுகளில் ஒன்றுதானும் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாக இல்லை. இதனால் ஐ. நா. சபையில் உலகின் பெரும்பான்மை மக்களைக் கொண்ட அணிசேரா நாடுகளின் உறுப்பினருக்கு எந்த வித அதிகாரமும் இல்லை.

இரண்டாம் உலகமகாயுத்தத்தில் வெற்றிபெற்றவர்களே இன்றும் ஐ நா. நாடுகளின் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாகும். இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்த நேரம் அது சரியாக இருக்கலாம் ஆனால் இன்று எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்து விட்டமையால் அது ஏற்புடைய விடயமாகக் கொள்ள முடியாது.

இந்த நிலையில், ஐ நாவில் இவ்வாறான மாறுதல்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும். அப்பொழுதுதான் சிறிய நாடுகளினதும், மூன்றாம் உலக நாடுகளின் எதிர்காலப் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இருக்கும். இதனை இவ்வருட ஆரம்பத்தில் நிகழ்ந்த வளைகுடாப் போரின் போது அடிக்கடி நாம் இந்தப் பகுதியில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

இதேவேளை, அணிசேரா மாநாட்டில் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும், பாதுகாப்புச்சபை விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதானமாக வலியுறுத்தியவர்கள் இந்தியா, பிறேசில், இந்தோனேசியா போன்ற பெரிய மூன்றாம் உலக நாடுகள் ஆகும். அதாவது அணிசேரா நாடுகளில் தாமும் வல்லரசுகளாக மாறவேண்டுமென்ற எண்ணம் கொண்டவையாகும். இந்தநிலையில், ஐ. நா பாதுகாப்புச்சபை விஸ்தரணம் என்பது நிரந்தர உறுப்பு நாடுகளாக அணிசேரா நாடுகளில் இருந்து பெரிய நாடுகள் ஒன்று இரண்டைச் சேர்த்துக் கொள்ளுதல் என்பதாக இருந்து விடக் கூடாது. பாதுகாப்புச்சபையில் சில நாடுகளுக்கு என விசேட அதிகாரங்கள் அதாவது வீட்டோ அதிகாரங்கள் இருப்பதே ரத்துச் செய்யப்பட வேண்டும். நாடுகளுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டு பெரும்பான்மையினர் என்ற ரீதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும். அப்பொழுதுதான் ஓரளவிற்காயினும் வல்லரசுகளின் மிரட்டல்களில் இருந்து சிறிய நாடுகள் தப்ப முடியும்.

---

...மீழக் கடற்பரப்பில் வண்டி ஒன்று பயணம் போவதும், திரும்பி வருவதும் உண்மையில் ஒரு பெரிய செருக்களத்திற்கு சென்று திரும்புவதற்கு சமமானது.

இந்தப் படகோட்டிகள் தான் எவ்வளவு உறுதியானவர்கள்?

ஆபத்தை எதிர்பார்த்தபடியே நிச்சயமற்ற பயணத்தைத் தொடங்கும் அவர்கள் கடலில்தான் எவ்வளவு உறுதியாக இருக்கிறார்கள்.

கடலின் விளிம்பை கண்களால் அளந்தபடியே, அலையின் ஒவ்வொரு எத்தல்களுக்கும் பதில்களை - சொல்லியபடியே படகினை செலுத்தும் அவர்கள்,

திடீரென தோன்றி மிக விரைவாக முன்னால் நிற்கும்

---

மடைந்தான்.

தொடர்ந்து கடலிலும் - தரையிலும் இவனது போராட்ட வாழ்க்கை கழிந்தது. டேவிட்டுடன் பழகும் எவரும் அவனுடைய சிந்தனைகள் யாவும் இயக்கம்-விடுதலை என்னும் இரண்டுவார்த்தைகளையும் மையப்படுத்தி இருப்பதை அறிந்து கொள்வார்கள்.

1987ஆம் ஆண்டு வடமராட்சி மீது "ஒப்பிரேசன் லிபரேசன்" என்னும் இராணுவ நடவடிக்கையை இராணுவத்தினர் நடாத்திய பொழுது, அந்நேரத்தில், அதுவரை காணாத வான் தாக்குதலை சிறிலங்காப்படையினர் நடாத்தினார்கள். அவ்வேளையில்,

50 கலிபர் துப்பாக்கியை விமானங்கள் பதியுமிடமெல்

---

கடற்பரப்பில் நின்று எந்நேரமும் அழிவுகளை விளைவிக்கும் கடற்படையினருக்கு கடலில் வைத்து கரும்புலித் தாக்குதலை நடத்த திட்டமிடப்பட்டது.

மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகிய மூன்று கரும்புலிகளும் வெடிமருந்து நிறைந்த படகோடு கடற்படையின் பாரிய கொள்கலன் (கென்டெயினர்) கப்பலை இலக்கு வைத்துச் சென்றனர்.

அதே நேரம், அவர்களின் இலக்கினை அடையும் வரை அவர்களை பாதுகாப்பதற்காக மூன்று படகுகள் ஆயுதம் ஏந்திய போராளிகளுடன் கடலில் இறங்கின. அவற்றிற்கு தலைமை தாங்கிச் சென்று அந்தத் தாக்குதலை

---

# யானைகள் அட்டகாசம்; ஆசிரியர் உட்பட நால்வர் பலி

(கொழும்பு)

எல்லை மீறிய யானைகள் அட்டகாசத்தினால் ஒரு பாடசாலை ஆசிரியர் உட்பட நான்கு பேர் அம்பாந்தோட்டையில் உயிரிழந்தனர். யானைகள் பதினேழு வீடுகளை நாசமாக்கி உள்ளன.

யால சரணாலயத்திலிருந்து வெளியேறும் யானைகளே இந்த அட்டகாசத்தில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது யானைகள் வீடுகளை மட்டுமல்லாது பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நெல்வயல்களையும் நாசம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சுவர் வீழ்ந்து இளம்தாய் மரணம்

(வவுனியா)

வவுனியா சாந்தசோலைப் பகுதியில் மழை ஈரம் காரணமாக சுவர் இடிந்து வீழ்ந்ததில் இளம் தாய் ஒருவர் பலியானார்.

12 ஆம் திகதி இரவு மேற்படி பகுதியில், வவுனியா நகரப்பகுதி சென்று மண்ணெண்ணை பெற்றுவரும் எண்ணத்துடன் கூரையற்ற வீடொன்றில் தங்கியிருந்த நெடுங்கேணிப்பகுதியைச் சேர்ந்த வெற்றிவேல் தங்கராணி என்பவரே பலியானவராவார்.

இவருடன் தங்கியிருந்த மேலும் நால்வர் படுகாயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (தி)

## நவம்பரில் வரவு செலவுத் திட்டம்

(கொழும்பு)

நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கும் 18ஆம் திகதிக்கும் இடையில் 1992ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

## எருதுகள் திருட்டு

(ஈச்சமோட்டை)

அளவெட்டி முதலியார் வீதியைச் சேர்ந்த சிவநேசன் என்பவரது வீட்டில் கட்டி நின்ற இரண்டு எருது மாடுகளை சென்ற புதன்கிழமை இரவு திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர். இந்த 2 மாட்டினதும் பெறுமதி பலஆயிரம் ரூபாய்கள் என தெரிவிக்கப்பட்டது. (43)

## சர்வதேச செஞ்சிலுவைக்கு புதிய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைக் குழு யாழ். பொறுப்பதிகாரியாக சுவிற்சலாந்தைச் சேர்ந்த குளாடியோ பரான்சினி நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த ஒன்பது மாதங்களாக மேற்படி குழுவின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பிறெட் மாற்றலாகி வரும் புதனன்று ஜெனிவா செல்கிறார்.

## சாரணர் தவணையாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

சாரணர் தவணையாக மூன்றாம் தவணையை யாழ். இந்துக்கல்லூரி பிரகடனப் படுத்தியுள்ளது

மேற்படி கல்லூரியில் சாரணர் குழு ஆரம்பிக்கப்பட்டு எழுபத்தைந்தாண்டுகள் நிறைவாவதை முன்னிட்டே மேற்படி பிரகடனத்தை அக்கல்லூரியின் அதிபர் அ. பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார். இதன்படி நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூன்றாம் தவணை முழுவதும் சாரணர் தவணையாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு பழைய சாரணர்கள் பல வகைகளில் உதவி வருவதாக சாரணர் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## வெடி குண்டுடன் பெண் கைது

(கொழும்பு)

திருக்கோணமலைதுறைமுக இறங்குதுறைக்கு சமீபமாக வெடிகுண்டுடன் சென்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

---

தியாகத்துளி : 2

### புரண்டது தேகம்

இரண்டாம் நாளில்
புரண்டது தேகம்...
வரண்டது நாக்கு ..
ஆனாலும் - ஒரு
கரண்டி நீர்கூட - பருக
மறந்தாயே... திலீபா !

— வாஞ்சிநாதன்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-10-11 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்,

1 நுண்ணுயிரியலில் உதவி விரிவுரையாளர் /விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11.
2. நுண்ணுயிரியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர்.
3 உயிரிரசாயனவியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர்.

**சம்பள அளவுத்திட்டம்**

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 :
ரூபா 9,600-8X250-11,600/- மாதமொன்றுக்கு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 :
ரூபா 8.000 – 5X250-9,250/-மாதமொன்றுக்கு

விரிவுரையாளர் (மருத்துவம்) :
ரூபா 4,500 - 10X200-6,500/-மாதமொன்றுக்கு (மருத்துவபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின்போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டு படிகள் அதிகமாக உள்ள சம்பளத்தில் அதாவது 4,900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும் )

தற்காலிக விரிவுரையாளர் :
ரூபா 4,000/- மாதமொன்றுக்கு.

உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுக்கு.

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் ...

# தென்கிழக்காசியாவில் அமெ. தளம் இருக்க வேண்டிய அவசியமில்லை

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ தளம் ஒன்று இருக்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று தமது நாடு கருதுவதாக இந்தோனேசிய வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார் ஜகார்த்தாவில் செய்தியாளரிடையே பேசிய அவர் மேலும் இப்பிராந்தியத்தில் அந்நிய இராணுவத்தளம் இருப்பது பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என்றும், பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க ஏனையோரை நிர்ப்பந்திக்கும் என்றும் கூறினார். பிலிப்பைன்சிலுள்ள அமெரிக்க இராணுவத்தளம் நீடிப்பதை இந்தோனேசியா எதிர்க்கும் என்றும், இந்தப் பிராந்தியத்திற்கு வெளியிலுள்ள நாடுகள் இராணுவத்தளம் அமைப்பதை இந்தோனேசியா விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்தோனேசியா அணிசேரா நாடு என்ற வகையில் வெளியாரின் இராணுவத் தளங்கள் இருப்பதை விரும்பவில்லை என்றும், வெளியாரின் இராணுவத் தளங்கள் கிடைக்கும் வருவாயில் தங்கியிருக்காது என்றும் கூறிய அவர் பிலிப்பைன்சில் அமெரிக்க இராணுவத் தளங்கள் நிரந்தரமாக இருக்க மாட்டாது என்று முன்பு கூறப்பட்டவற்றையும் சுட்டிக் காட்டினார்.

**கப்பலில்**

விருந்த மருந்து வகைகளும் எதிர்பார்த்தபடி கப்பலில் கொண்டுவரப்படவில்லை. பொருள்கள் இறக்கி முடிந்த பின்னர் கப்பல் நேற்றுக் கொழும்பு திரும்பிவிட்டது.

**ஓமந்தைவாசிகள்**

யாத சிலரால் கடத்தப்பட்டார்.

மேற்படி இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சிவபாலன் என்ற இளைஞரும் சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போய்விட்டார் (தி)

**மணலாறு**

அவர்களின் விபரம் வருமாறு:

★ அலிபா (மாமுடி, கிருஷ்ணகுமார், ஆண்டான்குளம், மன்னார்)
★ யுனைதா (வசந்தி தங்கராசா, மட்டக்களப்பு)
★ நியாஸ் (இராமநாதன் ஜெயானந்தராசா, காரைநகர்)
★ சுதா (ரஜனி பாலேந்திரன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
★ யூடி (ஜெயதேவி இராசரட்ணம் உடுத்துறை

இவர்களுக்குப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

**பாராளுமன்ற**

தியாளர் மாநாட்டில் மேலும் கூறுகையில், பிரேமதாசா பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவாரேயானால் நீதிமன்றத்தின் உதவியை நாடப் போவதாகவும், அரசியல் ரீதியான போராட்டம் நடத்தப் போவதாகவும் குறிப்பிட்டனர்.

இதேவேளை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விரக்தியின் விளிம்பிற்குச் சென்றுவிட்டார் என்பதை அவரது நட...

**மணலாற்றில்**

னர் எதிர்பார்த்ததைவிடப் புலிகள் கடும் எதிர்ப்பைக் காட்டிவருவதோடு இராணுவத் தரப்பில் பெருமளவின தான சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளனர். இதுவரை இடம்பெற்றமோதலில் 60 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 100பேர்காயமடைந்ததாகவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளவேளையிலும் இராணுவத்தினரின் இழப்பு இதைவிட அதிகமானதென சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பில் இரத்மலானை விமான நிலையத்திற்கும் பெரியாஸ்பத்திரிக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டுள்ள அம்புலன்ஸ்வண்டிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடும்போது இராணுவத்தினருக்கு கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை அநுராதபுர ஆஸ்பத்திரியிலும் பெருமெண்ணிக்கையில் காயமடைந்த இராணுவத்தினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை புலிகள் கடுமையாக எதிர்த்துப் போராடுவதோடு அவர்களின் முகாமைச்சுற்றி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதனால் இராணுவத்தரப்பில் அதிக இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் முக்கிய முகாம்களைப் பிடிக்க எவ்வளவு நாட்கள் எடுக்கும் என திட்டவட்டமாகக் கூறமுடியாது எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஓராண்டு நினைவஞ்சலி



## 2 ஆம் ஆண்டு நினைவு



மலர்வு : 21-04-1922

உதிர்வு : 16-09 1989

### திருமதி. மேரியோசப்பின் யோசப்

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"

27/11 புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் (R/1751) — இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆனையிறவு நேரடிமோதலில் வீரமரணம் அடைந்த

### வீரவேங்கை கப்டன் விஜி

(சிவராஜினி சின்னப்பு)
செல்வபுரம், உரும்பராய்

வீரஜனனம் 9-5-1970 — வீரமரணம் 18-7-1991

இப்புவியில் நாமிருந்து
ஏங்கிக் கண்ணீர் விட்டு
முப்போதும் தவறாது உன்
முழு நினைவாய் விழித்திருக்க
காற்றோடு காற்றாக
கலந்திட்ட சிவறாஜினியே!
ஆற்றாத நினைவலையால்
ஆன்மாவும் அமிழுதடி ஆனாலும்
உன் உயர் கொள்கையின் விடிவிற்காய்
தலைவனின் வழிநின்று வீரமண்ணில்
வித்தானாய் என்பதனால்
அடைகிறோம் மன உறுதி
வேண்டுகிறோம் ஆத்ம சாந்தி!

ஒருவர் முதல் நியமனத்தின்போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டு படிகள் அதிகமாக உள்ள சம்பளத்தில் அதாவது 4,900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.)

தற்காலிக விரிவுரையாளர்:
ரூபா 4,900/- மாதமொன்றுக்கு.

உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுக்கு.

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் இணை வேந்தர் ரூபா 4 500/- 10X200-6 500/- சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 4,500/- சம்பளப்படியில் வைப்பார்)

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் உதவிப்பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23X10 ச. மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1991-09-12.

(B/3116)

ரட்ணம் உடுத்துறை இவர்களுக்குப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

பாராளுமன்ற தியாளர் மாநாட்டில் மேலும் கூறுகையில், பிரேமதாசா பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவாரேயானால் நீதிமன்றத்தின் உதவியை நாடப் போவதாகவும், அரசியல் ரீதியான போராட்டம் நடத்தப் போவதாகவும் குறிப்பிட்டனர்.

இதேவேளை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விரக்தியின் விளிம்பிற்குச் சென்றுவிட்டார் என்பதை அவரது நடவடிக்கைகள் காட்டுகின்றன என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா பாராளுமன்றத்தைக் கலைக்கும் முயற்சி என்பது அவர் தன்மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களைக் கண்டு எவ்வளவு பயப்படுகிறார் என்பதைக் காட்டுகிறது என்றும், ஜனாதிபதி விரக்தியின் விளிம்பிற்குச் சென்றுவிட்டார் என்றும், ஜனாதிபதியின் தற்போதைய நியாயப்படுத்தல்கள் நகைப்புக்குரியன என்றும் லலித் அத்துலத் முதலி சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாராளுமன்ற அமைப்பை அழித்து விடவும் முயற்சிக்கிறார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.



''யாழ் கோட்டை முற்றுகையின்போது 16.9.90 அன்று வீர மரணமடைந்த

## வீரவேங்கை சுபாசினி

(சின்னக்கண்டு சரஸ்வதி)

விடியலைத்தேடிப் புறப்பட்ட பெண் புறாவே ...
உன் வீரப்போராட்டம் முடிந்ததென்று தமிழன்னை மடிதனில்
உறங்கிவிட்டவளே! வீரவேங்கை சுபாசினி!!
கையிலே ஆயுதம் எடுத்தாள் உணர்ச்சியுடன்
கோட்டைஇராணுவத்தை எதிர்த்துநின்றாள் வீரத்துடன்
விண்ணதிர மண்ணதிரப் போர் புரிந்தாள்;
சினைப்பர் தாக்குதலில் நெஞ்சை முன்கொடுத்தாள்
எதிரிகளின் குண்டை மகிழ்ச்சியுடன் ஏற்று நின்றாள்
தமிழீழ மண்ணில் மரணித்தாள்... நீ உறங்கி
ஆண்டு ஒன்று மலர்ந்து சென்றதடி
தேடித் திரிகின்றோம் காணவில்லை உன்னை!
வாடித் தவிக்கின்றோம் மாறவில்லை உன் நினைவு!
ஓராண்டு நினைவஞ்சலியைக் கண்ணீர் அஞ்சலிகளாகக்
காணிக்கையாக்குகின்றோம்.

''சுபாசினியே'' உன் கனவு மிகவிரைவில் நனவாகட்டும்...
''மலரட்டும் நாளை தமிழீழம். !!

இமையாணன்,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(R-1747)

இப்புவியில் நாமிருந்து
ஏங்கிக் கண்ணீர் விட்டு
எப்போதும் தவறாதுஉன்
முழு நினைவாய் விழித்திருக்க
காற்றோடு காற்றாக
கலந்திட்ட சிவராஜினியே!
ஆற்றாத நினைவலையால்
ஆண்மாவும் அமிழுதடி ஆனாலும்
உன் உயர் கொள்கையின் விடிவிற்காய்
தலைவனின் வழிநின்று வீரமண்ணில்
வித்தானாய் என்பதனால்
அடைகிறோம் மன உறுதி
வேண்டுகிறோம் ஆத்ம சாந்தி!

செல்வபுரம்,
உரும்பராய் தெற்கு.

— அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
உறவினர்கள்.

(B/3122)

# மரண அறிவித்தல்

## திரு. நடராசா கந்தசாமி

(மணியம்மடம், செல்வச்சந்நிதி, தொண்டமனாறு)

நடராசா கந்தசாமி அவர்கள் 15-9-91 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி நடராசாவின் அருமை மகனும், இராசபூபதியின் அன்புக்கணவரும், திருமதி இட்டிணபிள்ளையின் அன்புச் சகோதரனும், இரவீந்திரன் (மயூரன் கற்பூரம்), இரகுநாதன் (ப. நோ. கூ. ச. கிளை முகாமையாளர், துன்னாலை), யசோ, சிவநாதன் (ஜேர்மனி), புஸ்பநாதன் (C.T.B), சுதா, உருத்திரநாதன், ரஞ்சநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், இராசேந்திரன், சந்திரகுமார், சறோ, கலா, கெங்கா (ஜேர்மனி), மாலா ஆகியோரின் மாமனாரும், திரு கிருஷ்ணபிள்ளையின் சகலனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை (கொடிகாமம் லொறி உரிமையாளர்) யின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று (16 9 91) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இவரது கொடிகாமம் இல்லத்தில் இருந்து கொடிகாமம் கட்டபறிச்சான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன்

பொ. இராசேந்திரன் (ராசா)

(R/1753)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.